இந்திய வானிலை துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்

# வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை

# மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை - 23.09.2015

## மாநிலத்தின் கடந்த வார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேரவெப்பநிலை 32$^{o}$செ முதல் 40$^{o}$செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 22$^{o}$செ முதல் 29$^{o}$செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17$^{o}$செமுதல் 21$^{o}$செ ஆகவும்,இரவு நேர வெப்பநிலை 10$^{o}$செ முதல் 13$^{o}$செ ஆகவும் பதிவானது.

## வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவுரைகள் (23.09.2015 முதல் 27.09.2015)

### 1. மேற்கு மண்டலம்

மேற்கு மாவட்டங்களான கோயமுத்தூரில் வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானதுமுதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32$^{o}$செமுதல் 33$^{o}$செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23$^{o}$செ முதல் 24$^{o}$செ ஆகவும், காலை நேரகாற்றின் ஈரப்பதம் 72-76சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 58-62 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 16கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- வரும் ஐந்துநாட்களுக்குமழைஎதிர்பார்க்கப்படுகிறது.
- **திராட்சை** - தற்போதுநிலவும் காற்றின் ஈரப்பதம் மற்றும் மிதமானவெப்பநிலையால் ஆந்திரக்கனோஸ் நோய் தாக்குதல் அதிகமாகஏற்படவாய்ப்புள்ளது. இதைக்கட்டுப்படுத்த 1 சதவீதம் போர்டாக்ஸ் கலவைஅல்லது 0.25 சதவீதம் காப்பர் பூஞ்சாணக்கொல்லியைதெளிக்கவும்.
- **நெல்** - போதியவடிகால் வசதிஏற்படுத்திசம்பாநெல் நடவினைதொடர்ந்துமேற்கொள்ளவும்.
- **பருத்தி** - இறவை கம்போடியா பருத்திக்கு முதல் மேலுரமாக 20 கிலோ யூரியா, 6 கிலோ பொட்டாஷ் மற்றும் 25கிலோ வேப்பம்புண்ணாக்கினை இடவும். தண்டுத்துளைப்பானை கட்டுப்படுத்த செடிகளுக்கு மண் அணைக்கவும்.

### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35$^{0}$செ முதல் 38$^{0}$செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின்

ஈரப்பதம் 34 முதல் 62 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 5 கி.மீ முதல் 16 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை நிலையில் உள்ள குறுவை நெல்லினை தாக்க பாதுகாப்புடன் அறுவடை செய்யவும்.
- ✓ சம்பா நடவு செய்யும் விவசாயிகள் 1 ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம், 10 கிலோ ஜிங்சல்பேட், 30 கிலோ யூரியா, 40 கிலோ டிஏபி மற்றும் 10 கிலோ பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இடவேண்டும். சம்பா நடவிற்கு முன் ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டு பூச்சி மற்றும் நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.
- ✓ சம்பா நெற்பயிரில் இலைசிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு டைக்கோபால் 500 மி.லி ஏக்கர் அல்லது நனையும் கந்தகத்தூள் 400 கிராம் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**3. தெற்கு மண்டலம் - 1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் அதிகமான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை $24^0$செ முதல் $28^0$செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 42 முதல் 74 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 2 கி.மீ முதல் 24 கி.மீ வேகத்திலும் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தாளடி பருவத்தில் சாகுபடி செய்யப்படும் நெல்லுக்கு நீர்த்தேவையை குறைக்க தொழி உழவு மற்றும் சமப்படுத்துதல் செய்தல் அவசியம். எளிதில் மக்கும் பயிர்களான சணப்பு போன்ற பயிர்களுக்கு குறைந்தபட்சம் 7 நாட்கள் வரையும் கொளிஞ்சி போன்ற பயிர்களுக்கு 15 நாட்கள் வரையும் தொழி உழவு செய்து கால அவகாசம் கொடுக்கவும்.
- ✓ மானாவாரியில் சோளத்தை முன்பருவ விதைப்பு செய்வதற்கு ஒரு எக்டருக்கு 22.5 கிலோ என்ற அளவில் (பரிந்துரைக்கப்படும் விதையளவின் 1.5 மடங்கு) விதைகளை கடினப்படுத்தி விதைக்கவும். விதைகளை 2 சத பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் கரைசலில் 6 மணி நேரம் ஊறவைத்து பின்பு முன்பு இருந்த ஈரப்பதத்திற்கு நிழலில் உலர்த்தி விதைக்கவும். மானாவாரியில் சோளத்தில் பூச்சி தாக்குதலை குறைக்க விதைகளை 15 கிராம் குளோர்பைரிபாஸ் + 150 மி.லி. பசையுடன் கலந்து நிழலில் உலர்த்தி விதைக்கவும்.
- ✓ கடினப்படுத்தப்பட்ட சோள விதைகளை பருவமழை தொடங்குவதற்குமுன்பு முன்பருவ விதைப்பாக விதை மற்றும் உரம் விதைக்கும் கருவியைக்கொண்டு சீராக 5 செ.மீ. ஆழத்தில் விதைக்கவும். 40:20:0 கிலோ/ எக்டர் என்ற அளவில் தழை, மணி மற்றும் சாம்பல்

சத்துக்களை இடவும். உரம் விதைக்கப்பட்ட அதே வரிசையில் விதைகளை விதைத்து மண்ணால் மூடவும். விதைகளை 15 செ.மீ. இடைவெளிவிட்டு 60 செ.மீ. இடைவெளியில் அமைந்த இரட்டை வரிசைகளில் விதைக்கவும்.

**4. தெற்கு மண்டலம் - 2**

வரும் நாட்களில் தெற்கு மண்டலமான திண்டுக்கல், மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி ஆகிய மாவட்டங்களில் வானம் இலாசான மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலை 33°செ முதல் 39°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 25°செ முதல் 26°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 48 முதல் 68 சதவீதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 10 கி.மீ முதல் 16 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மற்றும் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. எனவே மண் மற்றும் பயிரின் வளர்ச்சியை பொருத்து தண்ணீர் பாய்ச்ச ஏற்ப்பாடு செய்யலாம்.
- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் இலேசான மழையைப் பயன்படுத்தி வரும் வடகிழக்கு பருவமழை பருவத்தில் மானாவாரியில் பயிர் சாகுபடி செய்வதற்கு ஏதுவாக மானவாரி நிலங்களை உழவு செய்ய கூடும்.
- ✓ எலுமிச்சை இலை சுருட்டு புழுவை கட்டுப்படுத்த லிட்டருக்கு 2மி.லி. குயினால்பாஸ் 25இசி என்ற அளவில் தெளிக்க வேண்டும்.
- ✓ விவசாயிகள் விளை நிலத்தில் ஒரு பகுதியை மட்டும் மழை நீரை சேமித்து வைப்பதற்கு முறையான ஏற்பாடுகள் செய்ய அறிவுறுத்தப்படுகின்றன. ஏனெனில் இந்த மழை நீரை பயன்படுத்தி வறட்சி காலங்களில் பயிர்களுக்கு பாசனம் செய்வதற்குப் பயன்படுத்த முடியும்.
- ✓ பின் சம்பா பருவத்தில் நேரடி விதைப்பில் விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.
- ✓ நெல் நடவு செய்யும் விவசாயிகள் 1 ஏக்கருக்கு 200 கிலோ ,ஜிப்சம், 10 கிலோ சல்பேட், 15 கிலோ யூரியா, 40 கிலோ டிஏபி மற்றும் 10 கிலோ பொட்டாசியம் ஆகிய உரங்களை அடியுரமாக இடவேண்டும். நடவிற்கு முன் ஒரு ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு இட்டு பூச்சி மற்றும் நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.
- ✓ குறுவை நெற்பயிரில் பூக்கும் பருவ குறுவை நெற்பயிரில் பூக்கும் பருவத்தில் கருப்பு நாவாய் பூச்சி தாக்குதல் பரவலாக தென்படுக்கிறது. இதனைக் கட்டுப்படுத்த புரோப்பனோபர் 50 இ.சி. மருந்தினை ஏக்கருக்கு 400மில்லி என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்ககூடும்.
- ✓ நெல் நாற்றங்காலில் தாக்கும் தண்டுத்துளைப்பான், இலைப்பேன் பூச்சிக்களைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு பர்போமிடான் 40 % SL 500அட தெளிக்ககூடும்.

- ✓ நெல்லில் குலை நோயினைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு குயினாசான் 200 மி.லி. அல்லது ரைசைகலசூசால் 200 கிராம் தெளிக்ககூடும். முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஏக்கருக்கு சூடாமோமோனோ ப்ளுரசன் 500 கிராம் பவுடரை 200 மி.லி. தண்ணீரில் கலந்து மாலை வேளையில் தெளிக்ககூடும்.

**5. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 19°செ 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 72 முதல் 86 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 8 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ காய்கறி பயிர்களில், ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ போரக்ஸ் மண்ணில் இடுவதன் மூலம், போரான் குறைபாட்டை சரிசெய்யலாம்.
- ✓ கேரட் பயிரில், கேரட் பிளவு படும் நோயை தடுக்க, மண்ணில் ஈரப்பதம் சரியான அளவில் பராமரிக்கவும்.

**6.வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 26°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 62 முதல் 72 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகமானது 3 கி.மீ முதல் 5 வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தென்மேற்கு பருவமழை இறுதிக்கட்டத்தில் இருந்தாலும், அதன் தாக்கம் சற்றே அதிகரித்து மேகமூட்டத்துடன் காணப்படும். ஆயினும் பகல் வெப்பம் 36,0°செ, வரை உயரும் வாய்ப்புள்ளதால், கோழிகளில் சற்றே வெப்ப அயற்சி காணப்படும். தீவன எடுப்பும் இயல்பைவிட குறையக்கூடும், இதனால் அடுத்த பருவ மழைக்காலம் துவங்கும் வரை தீவனத்தில் முட்டை உடைவதைக் குறைக்க சோடா உப்பினை டன்னிற்கு ஒன்று முதல் இரண்டு கிலோ வரை சேர்த்தும் தீவன எடுப்பை தூண்டும் வகையில் வெப்பம் குறைந்த நேரங்களில் தீவனமிடுவதும் மிகச்சிறந்ததாகும்,
- ✓ ஆடி,புரட்டாசிப் பட்டத்தில் மானாவரியில் தீவனச்சோளம் சாகுபடி செய்ய மறுதாம்பு தீவன சோளமான கோ.எப்.எஸ்.29 இரகத்தை விதைப்பு செய்யலாம். வரிசை நடவிற்கு ஒரு ஏக்கருக்கு 2கிலோ விதையும், தெளிப்பு செய்வதற்கு 4கிலோ விதையும் தேவைப்படுகிறது, இந்த இரகம் வறட்சியினைத் தாங்கி வளர்வதுடன் பசுந்தீவனம் மற்றும் உலர்தீவனமாகவும் பயன்படுத்தலாம்.

**7. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய

மாவட்டங்களில் வானம் பெரும்பாலுஞ் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 26°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 58 முதல் 86 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 2 கி.மீ முதல் 8 கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ கன்றுகள், செம்மறி மற்றும் வெள்ளாடுகளுக்கு சரியான குடற்புழு நீக்க மருந்து அளித்து குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும்.
- ✓ மழைக்காலம் துவங்குவதற்கு முன்பாக மாடுகளுக்கு சப்பை நோய் மற்றும் தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி ளேிக்க வேண்டும்.
- ✓ உழவர்கள் தங்கள் கால்நடைகளை ஏரி அல்லது குளத்தின் அருகில் புற்களை மேயவிடாமல் பாாத்துக்கொள்வதன் மூலம் தட்டைப்பழுக்களின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.
- ✓ அதிக ஈரப்பதமும் வெப்பமும் ஒட்டுண்ணிகள் மற்றும் ஈக்களின் பெருக்கத்தை அதிகப்படுத்தும். எனவே உழவர்கள் முறையாக கொட்டைகையை சுத்தம் செய்து கால்நடைகளின் சாணத்தை மூடி எருக்குரியில் சேரிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் ஒட்டுண்ணிகளால் நோய் பரவுவதை கட்டுப்படுத்தலாம்.
- ✓ உழவர்கள் தற்போது நிலக்கடலை பயிருக்கு களை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**8.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிது. பகல்நேர வெப்பநிலை 31°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23-24°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 82 முதல் 86 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 5 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மழையினால் ஏற்படும் நோய்களை தடுக்க அறுவடைச் செய்யப்பட்ட வாழைத்தார்களை உலர்வான இடங்களில் சேமித்து வைக்கவும்.
- ✓ காய்க்கும் பருவத்திலுள்ள அன்னாசியில் மழை நீர் தேங்காமல் வடிகால் வசதி செய்யவும்.
- ✓ வரும் நாட்களில் 32.0 மி.மீ அளவு மழை பெய்ய வாயப்புள்ளதால் தென்னை, கோ கோ, மிளகில் உரமிடுதலை தவிர்க்கவும்.
- ✓ புதுத்துளிர் மற்றும் பூக்கும் பருவத்திலுள்ள இரப்பரில் பாலித்தீன் ரைன்கார்ட் -ஐ மரத்தில் பால் வடியும் பகுதியில் மேல் பொருத்தவும். இதனால் மழைக் காலங்களிலும் பால் வெட்டலாம்.
- ✓ பூக்கும் தருணத்திலுள்ள கிராம்பில் மழைநீரை சேகரிக்க ஏதுவாக பாத்திகள் அமைக்கலாம்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்
வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்
கோவை - 3